கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.368/2018

அ.சா. 12 (LW – 20 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கலா | **தொழில்** | |
| **த/க பெயர்** | மத்தேயூ | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.08.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 4வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், ஜம்புதுரை கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2018 அன்று பள்ளபட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது அம்மையநாயக்கனூர் காவல் நிலைய குற்ற எண்.173/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளான புலிக்குட்டி என்ற ஒச்சான், கார்த்தி என்ற ஆப்பிள் கார்த்தி என்பவர்களை விசாரிக்க வேண்டும் என அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் நானும் என் உதவியாளரும் பள்ளபட்டி டு சோழவந்தான் ரோட்டில் சந்தோசபுரம் பிரிவிற்கு 12.00மணிக்கு சென்றோம். எங்கள் முன்னிலையில் புலிக்குட்டி என்ற ஒச்சான், கார்த்தி என்ற ஆப்பிள் கார்த்தி ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் 22.08.2018 அன்று காலை 07.00மணிக்கு கொடை ரோடு பஸ்ஸ்டாண்டில் தனியாக நின்று கொண்டிருந்த நபரிடம் கத்தியை காண்பித்து மிரட்டி அவர் பாக்கெட்டில் இருந்த ரூ.450/– பணத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் போகும் போது போலிசார் பிடித்துக் கொண்டதாகவும் கூறினார்கள். 03.06.2018 அன்று இரவு 10.10மணி அளவில் திண்டுக்கல் டு மதுரை ரோட்டில் கொடை ரோடு டோல்கேட் ரோட்டில் 5 கிமீ தொலைவில் செல்லும் போது ரோட்டின் ஓரமாக தனியாக ஒரு நபர்

நின்று கொண்டிருந்ததை பார்த்ததாகவும் ஜெயசூர்யா என்பவர் அவரிடம் வண்டியை பிடிங்கி செலவுக்கு வைத்துக் கொள்ளலாம் என கூறியதாகவும் சொன்னார். அதன்பிறகு ஜெயசூர்யா தனியாக நின்ற நபரின் பைக்கை தள்ளிவிடவும் அந்த நபர் ஜெயசூர்யாவின் முகத்தில் கல்லை எடுத்து அடித்து விட்டதாகவும் உடனே புலிக்குட்டி என்ற ஒச்சான், கார்த்தி என்ற ஆப்பிள் கார்த்தியும் தனியாக நின்ற நபரின் கையை பிடித்துக் கொண்டதாகவும், ஜெயசூர்யா அந்த நபரை இடது மார்பில் மாறி, மாறி கத்தியால் குத்தியதாகவும், அஜித்குமார் வயிற்றில் கத்தியால் கிழித்ததாகவும், அதன் பின்னர் அங்கிருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 58 AB 2837 என்ற எண்ணுள்ள Suzuki GIXER என்ற பைக்கை வைத்து கொலை சம்பவத்தின் போதும், தற்போது வழிப்பறி சம்பவத்தின் போதும் பயன்படுத்திய கத்தியையும் ஒப்படைப்பதாக புலிக்குட்டி என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 11ஆகும். ( இதன் அசல் திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் உள்ள SC.No. 366/ 2018என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது) ஆப்பிள் கார்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கொலை சம்பவத்திற்கும், வழிப்பறிக்கும் பயன்படுத்திய என் கத்தியை பாக்கெட்டிலிருந்த சூர்யாவின் செல் போனையும் ஒப்படைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். ஆப்பிள் கார்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.12. ஆகும். 08.09.2018 அன்று காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நிலையம் சென்று அங்கிருந்த 1ம் எதிரி ஜெயசூர்யா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என் முன்பும் என் உதவியாளர் முன்பும் ஆய்வாளர் பதிவு செய்தார். அதன் அடிப்படையில் மேற்படி 1ம் எதிரி ஜெயசூர்யா கொலை சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை மதுரை சொக்கநாதபுரத்தில் உள்ள தன் வீட்டில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். தன்னை அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த வாக்குமூலத்தில் என்னிடமும் என் உதவியாளரிடமும் கையெழுத்து வாங்கினார்கள்., அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.13. ஆகும். அதன்பின்பு எல்லோரும் புறப்பட்டு சொக்கநாதபுரத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு காலை 10.0மணிக்கு போனோம். எதிரி அவர் கொலை பயன்படுத்திய மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.,த.சா.ஆ.14.ஆகும். இந்த கத்தியைதான் எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தி சா.பொ.4. ஆகும். (அயிட்டம் எண்.2) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை குவிமுச 231 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.12 16:23:50 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.